بسم الله الرحمن الرحيم

Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃபா

04 May 2018 (17 Shabaan 1439 A H)

# "The Dire State of the Muslim World"

# "இஸ்லாமிய உலகின் அவல நிலை"



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவசும், அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

இன்றைய உலக நிலைமை, அனைத்து முஸ்லீம்களுக்கு மிகவும் கவலைக்குரியதாகும் (அதைப் போன்றே ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த என் தோழர்களுக்கும்). ஆகவே நான் உங்களுக்கு மீண்டும் நினைவூட்டுகிறேன். அல்லாஹ்விடம் உள்ள பூர்வமாக பிரார்த்தனை செய்யுங்கள். இஸ்லாம் எதிர் கொள்ளும் அபாயங்களை

அல்லாஹ் அகற்றிவிடட்டும். முஸ்லீம்களின் முகத்தை மறைத்துக் கொள்ளும் இருண்ட மேகங்கள் நீங்கிவிடட்டும். அவன் நாடும் பொழுது இறைவனுக்கு இதை நீக்கிவிடக் கூடும்.

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ முஸ்லீம்கள் ஆபத்தை எதிர்கொள்ளாத எந்த ஒரு பகுதியும் உலகில் இல்லை. முஸ்லீம்களிடமிருந்து அறிவார்ந்த எந்த விடையையும் நமக்கு காண இயலாது. அவர்களுக்கு அறிந்த ஒரேயொரு பதில் என்பது வெறுக்கத்தக்கதாகும். தங்களின் சொந்த முஸ்லீம் சகோதரர்களைத் துன்புறுத்திக் கொள்ளுகின்றனர். அது மூலமாக இஸ்லாமின் உன்னதமான நோக்கங்களை தங்களின் கைகளால் முடிவு கட்டிக் கொள்கின்றனர். உள் நாட்டுப் போர்கள் மற்றும் மதகலவரங்களை அவர்கள் தங்களுக்குள்ளேயே எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் அஹமது (அலை) அவர்களின் மீது நம்பிக்கை கொள்ளும் காரியம் வரும் பொழுதும் அதைப்போன்றே இந்நூற்றாண்டில் தோன்றிய இந்த எளியவனாகிய கலீ.்.பத்துல்லாஹ்வின் வாதங்கள் வரும் பொழுதும் அனைத்து முஸ்லீம் பிரிவினர்களும் ஒன்றிணைந்து நம் மீது தாக்குதல் மேற்கொள்கின்றனர். இறை உண்மையை அழித்து விடுதல் என்ற ஒரேயொரு காரியத்தில் மட்டும்தான் அவர்கள் ஒன்றுகொன்று பொருந்திக்கொள்கின்றனர்., உதவுகின்றனர். ஹஸ்ரத் முஹமது (ஸல்) அவர்களுக்கு பிறகு தீனுக்குள் சீர்திருத்தவாளர்களாக தோன்றிய தூதர்களின் வருகையை அவர்கள் மறுத்துக் கொண்டார்கள். அவர்களை பொய்யர்கள் எனக்கூறினார்கள்.

நம்பிக்கையின் பெயரில் அதிகமாக துன்புறுத்தல்களுக்கு ஆளாகிக் கொண்ட அஹமதியா முஸ்லீம் ஜமா அத்தும் இப்போது இந்த வழியையே தேர்ந்தெடுத்துள்ளனர். அல்லாஹ்வின் மீது உண்மையான நம்பிக்கை கொள்ளுகின்றோர்களை துன்புறுத்திக் கொள்ளுகின்றனர். எல்லா நிலையிலும் இஸ்லாமிற்கு மாறான செயல்களைக் கொண்டு அல்லாஹ்வின் படகினை கவிழ்க்க அவர்கள் முயற்சிக்கின்றனர். உதாரணமாக மௌரீஷியஸ் அஹ்மதியா ஜமா அத்தின் அதிகாரிகள் இஸ்லாமிற்கு மாறான சட்டங்களை தொடர்ச்சியாக வெளியிட்டு

வருகின்றனர். கலீ∴.பத்துல்மஸீஹின் அனுமதியுடன் தான் இத்தகைய அறிக்கைகளை விடுப்பது என அவர்கள் கூறுகின்றனர். கலீ∴.பத்துல்லாஹ் என்ற இந்த எளியவனை (முனீர் அஹ்மது அஸீம் (அலை).) பார்த்தால் எழும்பி செல்ல வேண்டும் என்றும் சலாம் கூறக் கூடாது என்றும் இவர்கள் சட்டங்கள் உருவாக்குகின்றனர். இத்தீர்மானத்திற்கு எதிராக செயல்படுபவர்களுக்கு கடுமையான தண்டனை (ஜமா அத்திலிருந்து வெளியேற்றிக் கொள்ளுதல்) வழங்கப்படுகிறது.

எனவே என்னுடைய இன்றைய பிரசங்கத்தின் இதயத்திற்கு நான் திரும்பி வருகின்றேன். மெக்காவில் மிக பெரிய புனித யாத்திரையை நிறைவேற்றும் போது, மிக சிறந்த கர்மனான ஹஜ்ஜு செய்யும் போது, இஸ்லாமின் ஐந்தாவது தூண் ஆகிய ஒரு செயலை ஒரு நம்பிக்கையாளர் நிறைவேற்றுகின்றார். சவூதி அரேபியன் அரசாங்கம் வெவ்வேறு முஸ்லீம் மத குருக்களின் ஒத்துழைப்புடன் முஸ்லீம்களாகிய தங்களின் சகோதரர்களை புனிதமான பூமியில் (மெக்கா மதினா) நுழையவிடாமல் தடுத்துக் கொள்கின்றனர். அல்லாஹ்வின் பார்வையில் இது மிக மோசமான செயலாகும். அவர்கள் பிற மக்களின் நம்பிக்கையின் மீது தீர்ப்பு கூறுகின்றனர். இவ்வுலக ஈர்ப்பில் மூழ்கி இஸ்லாமை அழிப்பதற்கு அம்முஸ்லீம் நாடுகளுக்கு வழி வகுத்துக் கொடுப்போர்கள்தான் தங்களின் சகோதரனின் இஸ்லாமிய நம்பிக்கையைப் பற்றி தீர்ப்பு கூறுவது!

நிச்சயமாக அல்லாஹ் இதயங்களின் உள்தோன்றல்களை நன்கறிந்தவனாகயிருக்கின்றான். தனது அடியார்களின் நம்பிக்கையின் காரியங்களில் தீர்ப்பு கூறுகின்றவன் அவனாவான். இவ்வுலகின் வாழும் ஒரு மனிதனுக்கு மற்றொரு மனிதரின் மனதில் இருக்கும் நம்பிக்கையைக் குறித்து அறிய முடிவதில்லை. இஸ்லாத்தை வெறுப்பவர்களுக்கு நட்பின் கரங்களை அவர்கள் நீட்டிக் கொடுக்கின்றார்கள். இஸ்லாமிய நாடுகளைச் சார்ந்த தங்களின் சொந்த சகோதரர்கள் சகோதரிகள் மற்றும் குழந்தைகளை அழித்தொழிப்பதற்கு அவர்கள் ஆயுதங்கள் மற்றும் பொருளாதார உதவிகளை அளித்து துணைபுரிந்து வருகின்றனர். இந்த முஸ்லீம் நாடுகள் இத்தகைய தாக்குதல்களுக்குள்ளாகுவதற்கு காரணம்

அவர்களின் கரங்களில் பொம்மைகளாக இருக்க இவர்கள் ஒப்புக் கொள்ளாததனாலோ அல்லது இவர்கள் சரியான முஸ்லீம்களல்ல என அவர்கள் தீர்மானித்துக் கொண்டதனாலோ ஆகும்.

இக்காலகட்டத்தில் அல்லாஹ்வின் கலீ.ஃபா என்ற நிலையில் எல்லா முஸ்லீம்களுக்கும் குறிப்பாக அவர்களின் தலைவர்களுக்கும் அறிவுரை வழங்க வேண்டியது என் கடமையாகயிருக்கின்றது. அவர்கள் அதை கவனித்துக் கொண்டாலும் இல்லாவிட்டாலும் சரி! இந்த சூழ்நிலையில் நம் வாழ்க்கையில் எந்நேரமும் பிரார்த்தனை நமக்கு மிக அவசியமாகயிருக்கின்றது.

நமது பிரார்த்தனைகளுக்கு இரண்டு நிலைகள் உள்ளன. ஒன்று முஸ்லீம்கள் தங்களின் நிலைமையை சரியாக புரிந்துக் கொள்ள வேண்டும். அதைப் போன்றே அறிவார்ந்த மற்றும் நேர்மையான தலைமை அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இஸ்லாமை தாக்கிக் கொள்வதற்கும் மற்றும் தீங்கிழைப்பதற்கும் முயற்சிப்பவர்களின் அனைத்து முயற்சிகளையும் இறைவன் தகர்த்தெறிந்து விடட்டும்.

அரசியலுக்குள் மதத்தை புகுத்திக்கொள்வது உண்மையில் வருத்தமாக இருக்கிறது. அரேபியன் நாடுகளின் தவறான முடிவுகளாலும் மேற்கு மற்றும் அதன் சூழ்ச்சிகளை பின்பற்றிக் கொள்வதாலும் இஸ்லாம் மோசமான பெயரைப் பெறுகிறது. அண்மைய மாதங்களில் கத்தருக்கு எதிராக ஏற்படுத்திய தடை மற்றும் ஈரானுக்கு எதிரான மோதல்கள் (2016 - ம் ஆண்டில் ஈரானிலிருந்துள்ள புனித ஹஜ்ஜு யாத்திரைக்கு சௌதி அரேபியா தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருந்தது) அத்துடன் சிறியா மற்றும் பாலஸ்தீனிலும் தொடர்ந்து வரும் பெரிய பிரச்சினைகள், அங்கு நிலவுகின்ற வறுமை மற்றும் சிறுபான்மை சமுதாயத்தினரால் ஏற்படுகின்ற பிரச்சினைகள் - உண்மையில் இவையனைத்தும் இஸ்லாமின் அவல நிலையை சுட்டிக்காட்டுகின்றது. ஒரு ஐக்கிய முன்னணியாக இருந்து ஆற்றலுடன் செயல்படுவதற்கு பதிலாக அவர்கள் ஒன்றுக்கொன்று மோதி பல குழுவினர்களாக பிரிந்துவிட்டனர்.

முஸ்லீம் தலைவர்கள், மத்தியக்கிழக்கு நாடுகளில் தற்போது நிகழ்ந்துக் கொண்டிருப்பவை அல்லது நிகழப் போகின்றவைக் குறித்து

கௌரவமாக சிந்திப்பதில்லை. அங்கு நிகழ்ந்து வருபவை முஸ்லீம் நாடுகளுக்கு தீங்கு விளைவிப்பதோடு அம்முஸ்லீம் நாடுகளுக்கு பயன் கிடைப்பதற்காகவும் இருக்கின்றது. அதை அவர்கள் உணர்வதில்லை. முஸ்லீம் நாடுகளுக்கு ஞானத்தை வழங்கி அவர்களை வழி நடத்திட நமக்கு அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்வோம். தெய்வீக சக்திக்கு மட்டுமே இந்த துன்பத்தை நிம்மதியாக மாற்ற இயலும்.

உலகில் நீதியை நிலை நாட்டுவதற்கும் அடக்கு முறைகளுக்கு எதிராக போராட்டத்தை மேற்கொள்வதற்கும் நாம் முயற்சிக்க வேண்டும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதாக காணலாம். **"ஒரு முஸ்லீம் தனது சகோதரனுக்கு உதவ வேண்டும்" அவர் ஒடுக்கப்பட்டவராகயிருந்தாலும் சரி! ஒடுக்குபவராகயிருந்தாலும் சரி!** ஒடுக்கு முறைக்கு உதவுவது எப்படி என்று கேட்கப்பட்ட போது, **"ஒடுக்குமுறை செயல்பாடுகளிலிருந்து அவர் கைகளை அடக்கி கொள்வதற்கான வழி முறைகளை கற்ப்பித்தவாறு நீங்கள் உங்கள் உதவும் கரங்களை அவருக்கு நேராக நீட்ட வேண்டும்"** என்று திரு நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார். போர்கள் மற்றும் கலவரங்களின் கோடுகள் மூலம் துயரமடைகின்ற முஸ்லீம் நாடுகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கொண்டு வருவதற்கு முயற்சிகளை செய்து வரும் அனைத்து நாடுகளையும் அதாவது முஸ்லீம் மற்றும் அம்முஸ்லீம் நாடுகளையும் நான் பாராட்டுகின்றேன். திருக் குர் - ஆன் போதனைகள் படியும், திரு நபி (ஸல்) அவர்களின் நடைமுறை படியும், அல்லாஹ் விதித்த வரம்புகளை மனதில் கொண்டு புத்திசாலித்தனமாக செயல்பட முஸ்லீம் நாடுகள் தயாராக வேண்டும்.

அநீதியிழைப்பதிலிருந்து நம் சகோதரர்களின் கரங்களை நாம் தடுத்துக் கொள்ள வேண்டும். அது வாயிலாக நாம் அவர்களுக்கு உதவுகிறோம். அவர்கள் அநீதிக்குள்ளாகும் போதும் நாம் அவர்களுக்கு உதவ வேண்டும். கடுமையான எதிர்ப்புகளை அமைதியின் கேடயத்தால் தடுத்துக் கொண்டு இஸ்லாமிய உலகம் முன்மாதிரியாக இருக்க வேண்டும். அது வாயிலாக இஸ்லாமின் பெருமைகள் உலகிற்கு முன் பிரகாசித்து விடும். முஸ்லீம்களின் முறையற்ற நடத்தை இஸ்லாமின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துகின்றது.

ஒரு முறை ஒரு இராணுவ பிரச்சாரத்தின் போது தனது தோழர்களிடமிருந்து பிரிந்து ஒரு மரத்தின் கீழ் நிழலில் திரு நபி (ஸல்)அவர்கள் ஓய்வெடுத்தார். அவர் கண் விழித்துக் கொண்ட நேரம் கையில் வாளுடன் ஒரு பகைவன் தம்முன் நிற்பதை அவர் பார்த்தார். அந்த பகைவன் கூறினான்.

முஹமது! இப்போது உன் உயிரைக் காப்பாற்ற எவருக்கு முடியும்?.

திரு நபி (ஸல்) அவர்கள் பதிலளித்தார் அல்லாஹ்! அந்த வார்த்தையை கேட்ட உடனே அவரது கைகளிலிருந்த வாள் கீழ் வீழ்ந்தது.

**சோதனைகள் மற்றும் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் ஒவ்வொரு நம்பிக்கையாளரும் கொடுக்க வேண்டிய ஒரே ஒரு பதில் இதுதான். வாள் அல்லது வேறு எந்த ஆயுதமானாலும் சரி, அந்த ஆயுதங்கள் இருக்கும் கைகளை கட்டுப்படுத்துவது அல்லாஹ்வின் வல்லமை என்று நாம் உணர வேண்டும்.**

நமது காலகட்டத்தில் ஜமா அத்துச்சஹீஹில் இஸ்லாம் என்பது அல்லாஹ் தேர்ந்தெடுத்த கலீ ஃபா தலைமையில் இயங்கி வருகின்ற அமைப்பாகும். உண்மையில் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் பகைவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது சித்தத்திற்கும் எதிராக போராடுகின்றனர். அவர்களுக்கு முதலில் தாக்கி கொள்ள முடிந்து விடும் என்று உண்மையை எதிர்ப்பவர்கள் எண்ணுகின்றனர். உண்மையான இஸ்லாமின் பிரதி ஒளியாக திகழும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை அழிக்கத் தூண்டப்பட்ட கைகளோ, அவர்கள் தாக்கிக் கொள்வதற்கு முன்பே இறைகோபத்தின் மின்னலால் அவர்கள் அழிந்து விடுவார்கள். அல்லாஹ்வின் விதியை தகர்த்துக் கொள்ள எந்த ஓர் சக்திக்கும் ஆகாது. உண்மையான நம்பிக்கையாளர்கள் கடுமையான துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்படுவார்கள் என்று திருமறை கூறுகின்றது. ஆனால் அல்லாஹ்வின் மீது உறுதியான மற்றும் முழுமையான நம்பிக்கை கொண்டிருப்பீர்களானால் எதிராளிகளின் எல்லா

#ட்சிகளிலிருந்தும் அல்லாஹ் தனது நேர்மையான ஊழியர்களை காப்பாற்றிக் கொள்கின்றான்.

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிற்கும் மற்றும் அல்லாஹ்வின் உண்மையான ஊழியர்களுக்கும் எதிராக இக்காலகட்டத்தில் எழும்புகிற எதிர்ப்புகள் யாவும் முன்னேற்றத்தின் புதிய பாதைகளை நமக்கு திறந்து தர காரணமாகயிருக்கும். ஆகவே இறைவன் மீது முழு நம்பிக்கை வைப்பதற்கும், உறுதியுடன் இருப்பதற்கும் மற்றும் உங்களிடம் அனுப்பப்பட்டிருக்கும் தூதரின் செய்தியைச் செவிசாய்பதற்கும் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன். நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர்களின் செய்தியைச் செவியுறுவோர் எவரும் இழந்து போனதில்லை. எந்நேரமும் வெற்றி உங்கள் கூடவே இருக்கும்.

இன்ஷா அல்லாஹ். ஆமீன்!

அறிவிப்பு :

அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்! இன்று ஜுமா தொழுகைக்குப் பின்னர் தமிழ்நாட்டைச் சார்ந்த நமது சகோதரர்கள் ஒரு சிறப்பு தர்பியத் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கின்றனர். மேலும் அல்லாஹ்வின் இரக்கம் மற்றும் அவனது அருட் கொடைகளால் தமிழ்நாடு ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாம் அதிகார பூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து புகழும் அல்லாஹ்வுக்கே ஆகும். உன்னதனும் வல்லமையுடையவனுமாகிய அல்லாஹ்வின் உதவியால் மட்டுமே நன்மை வாய்ந்த நல்லொழுக்க செயல்களை நிறைவேற்றிட முடிவது.


ISSUED BY:

R. JAMALUDDIN RAOTHER
Amir Kerala South Zone, India
Jamaat Ul Sahih Al Islam
Email : jamal.raother@gmail.com
**Phone:** 9447001832,04752252663
**Blog:** www.sahih-al-islam.blogspot.in

Translated by
Azim Ahmad
Email: azimahmad070@gmail.com
**Phone** : 9789180817